# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● மார்ச் 30, 2024

Weekly E-paper ● March 30, 2024



# இதற்கு மேல் பேச என்ன இருக்கிறது?

சுப. வீரபாண்டியன்

## பெண்களின் வாக்கு, இனி திமுகவிற்கே!

வெற்றிச்செல்வன்

## ‘தேர்தல்’ கவனம் சிதறக்கூடாது!

தலையங்கம்

## இயக்கச் செய்திகள்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● மார்ச் 30, 2024 Weekly E-paper ● March 30, 2024


# இதற்கு மேல் பேச என்ன இருக்கிறது?

## சுப. வீரபாண்டியன்

தேர்தல் காலம் என்பது பெரும்பாலும் உணர்ச்சிகளால் வழிநடத்தப்படுகிற காலமாகத்தான் இருக்கும். ஆவேசமான உரைகள், அடாவடியான சொற்கள், சட்டென்று பற்றிக்கொள்ளும் கலவரங்கள் ..... இப்படித்தான் நாள்கள் நகரும்! அதிலும் முக்கியமான தலைவர்கள் போட்டியிடும் தொகுதிகளில், சில காரசாரமான விவாதங்கள் வந்து சேரும்!

இதற்கு நேர் மாறாக, ஆழமான, அழுத்தமான தன் உரையை, மிகுந்த கண்ணியத்தோடு, தர்மபுரித் தொகுதியில் உள்ள தடங்கம் என்னும் ஊரில், திமுக கழகத்தின் தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் ஆற்றி இருக்கிறார். அந்தத் தொகுதியில்தான் பாமகவின் நிறுவனர் மருத்துவர் ராமதாஸ் அவர்களின் மருமகள் சௌமியா அன்புமணி போட்டியிடுகிறார்.

மூத்த தலைவர்களில் ஒருவரான ராமதாஸ் அவர்களைப் பற்றி பேசும்போது, உரிய மதிப்பளித்து உரையாற்றி இருக்கிறார் முதல்வர். சமூக, அரசியல் கருத்தோட்டங்களை மட்டுமே முன் வைத்துச் சில நியாயமான கேள்விகளை அந்தக் கூட்டத்தில் அவர் கேட்டிருக்கிறார்!

அவர் கேட்டுள்ள கேள்விகளின் சாரம் இதுதான்.

1. சமூக நீதியைப் பாதுகாப்பதற்காகவே தொடங்கப்பட்ட ஒரு கட்சி, சமூக நீதிக்கு முற்றிலும் எதிரான, இட ஒதுக்கீட்டைச் சிதைத்து, "உயர் ஜாதி ஏழைகள் " என்று சொல்லி, 10 விழுக்காடு இட ஒதுக்கீட்டை அவர்களுக்குக் கொடுத்திருக்கும் பாஜகவுடன் எந்த அடிப்படையில் கூட்டணி வைத்து இருக்கிறீர்கள்?
2. சாதிவாரிக் கணக்கெடுப்புக்கு உத்தரவாதம் கொடுக்கும்படி வரவிருக்கும் அரசை வலியுறுத்துவோம் என்று சொல்லும் பாமக, அப்படி ஒரு உறுதியை பாஜகவிடம் பெற்று இருக்கிறதா? மல்லிகார்ஜுன கார்கே வெளியிட்டுள்ள காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையில் அப்படி ஓர் உறுதி இருக்கிறது. ஆனால் மோடியின் உத்தரவாதங்களில் ஒன்றாக அது எங்கேனும் சொல்லப்பட்டிருக்கிறதா?



3. ஐக்கிய முன்னணி அரசு எடுத்த சாதிவாரிக் கணக்கெடுப்பைக் கூட, பாஜக அரசு வெளியிடவில்லையே.... அதனோடு எப்படிக் கூட்டணி?
4. வன்னியர்களின் இட ஒதுக்கீட்டுப் போராட்டத்தில் பங்கேற்று உயிர் துறந்தவர்களுக்கு, அங்கீகாரமும் உதவித் தொகையும் அளித்தது திமு கழக அரசுதானே! இன்றைக்கும் சமூக நீதிக்காகக் குரல் கொடுத்து கொண்டிருப்பது திமுகதானே!

இப்படித் தரமான கேள்விகளை முன்வைத்த முதலமைச்சர், இறுதியாகச் சொன்னார் .... "ராமதாஸ் அவர்கள் மூத்த தலைவர்களில் ஒருவர். அவர் மீது நான் வைத்திருக்கும் மதிப்பு காரணமாக, இதற்கு மேல் ஒன்றும் பேச விரும்பவில்லை."

இதற்கு மேல் பேச என்ன இருக்கிறது? ●


வாக்களிப்பீர் திமுக கூட்டணிக்கு

# பெண்களின் வாக்கு, இனி திமுகவிற்கே!

## வெற்றிச்செல்வன்



தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா இருந்தபோது, பெண்களின் வாக்கு அதிக அளவில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு விழுந்ததாகச் சொல்லப்பட்டது. அதற்கு ஜெயலலிதா அவர்கள் ஒரு பெண் என்ற காரணம் மட்டுமே. ஆனால் அதே அதிமுக ஆட்சியில்தான் பெண்களுக்கு எதிரான வாச்சாத்தி கொடுமையும், அதற்கு ஜெயலலிதா அரசே காவல்துறைக்குத் துணைநின்ற அவலமும் நேர்ந்தது.

பெண்களுக்கு உரிமையும், அதிகாரமும் அளிக்கும் பல்வேறு திட்டங்களும், சட்டங்களும் திராவிட முன்னேற்றக் கழக அரசால்தான் கொண்டு வரப்பட்டன. பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கும் சட்டமாகட்டும், அன்னை சத்தியவாணிமுத்து அவர்களின் பெயரால் தொடங்கப்பட்ட இலவசத் தையல் இயந்திரம் அளிக்கும் திட்டமாகட்டும், இவை அனைத்தும் திமுக ஆட்சியில் இருந்தபோது கொண்டுவரப்பட்டவை.

பாலினச் சமத்துவத்திற்கான இதுபோன்ற திட்டங்களை உள்ளடக்கியதே திராவிட மாதிரி (Dravidian model) எனப்படுகிறது. இத்தகைய நலத் திட்டங்கள் தமிழக முதல்வர் ஸ்டாலினின் ஆட்சியில் இன்னும் ஒரு மைல்கல்லை எட்டியுள்ளன. இனி திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத்தான் பெண்களின் வாக்குகள் விழும் என்ற நிலையை உருவாக்கியுள்ளது கடந்த மூன்று ஆண்டு கழக ஆட்சி.

தேசிய சராசரியைவிட தமிழ்நாட்டில் வேலைக்குச் செல்லும் பெண்களின் விழுக்காடு இருமடங்கு அதிகம். அவ்வாறு வேலைக்குச் செல்லும் பெண்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் வகையிலும், அவர்களது பொருளாதாரத்தை இன்னும் வலுப்படுத்தும் வகையிலும், கட்டணமில்லாப் பேருந்துப் பயணத்தை திமுக அரசு 2021ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியது. தமிழ்நாடு திட்டக் குழுவின் ஆய்வறிக்கையின்படி, இத்திட்டமானது பெண்களின் மாதாந்திர வருவாயில் 8 முதல் 12 விழுக்காடு செலவினத்தைக் குறைக்கிறது.

2022ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் புதுமைப் பெண் திட்டம், நலிவுற்றக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவிகளுக்கு மாதம் ரூ. 1000 வழங்கியது. இது உயர்கல்வி கற்கும் பெண்களின் விழுக்காட்டினை அதிகரிக்க வழிவகுக்கிறது. கலைஞரின் மகளிர் உரிமைத் திட்டமோ பெண்களின் பொருளாதாரத் தற்சார்பையும், சுதந்திரத்தையும் உறுதி செய்கிறது.




பாலினச் சமத்துவத்தை உறுதி செய்வதற்கு ஓர் அரசு கொண்டுவர வேண்டிய திட்டங்களே இவை. வெறுமனே குடியரசுத் தலைவர் பதவியோ, அமைச்சர் பதவியோ அளித்து விட்டு, இல்லத்தரசிகளை நேரடியாக பாதிக்கும்படி எரிவாயு உருளையின் விலையை பன்மடங்கு உயர்த்தியுள்ளது பாஜக. "பெண்களுக்கு நாங்கள் அதிகாரம் அளிக்கிறோம்" என்ற பாஜகவின் வெற்றுக் கூச்சலால் மக்களை ஏமாற்ற முடியாது.

உலக அளவிலான பாலினச் சமத்துவக் குறியீட்டில் (Gender parity index 2023) இந்தியா 127வது இடத்தைப் பெற்றுள்ளது. 2014ஆம் ஆண்டில் 114வது இடத்தைப் பெற்ற இந்தியா, இப்போது 127வது இடத்திற்கு வந்துள்ளது. இது பிரதமர் மோடி தலைமையிலான பத்தாண்டில் பாலினச் சமத்துவம் அடைந்துள்ள வீழ்ச்சியைக் காட்டுகிறது. இனிமேலும் பாஜக ஆட்சி தொடர்வது பெண்களின் முன்னேற்றத்தைத் தடுத்து அவர்களை வீட்டுக்குள்ளேயே முடக்கி விடும். எனவே ஒன்றியத்தில் பாஜக அரசு அகற்றப்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். ●

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## ‘தேர்தல்’ கவனம் சிதறக்கூடாது!

எவ்வளவு மோசமான ஒரு பாசிச சர்வாதிகார ஆட்சியை நடத்தியிருக்கும் பா.ஜ.கவின் பிரதமர் மோடி, இன்று ஆடிப்போய் இருக்கிறார்.

ஆர்.எஸ்.எஸ்-இன் இந்து ராஷ்டிர ஆட்சியை நிறுவ வேண்டும் என்ற நோக்கில் மதவெறி, இனவெறி, வெறுப்பரசியல், தகுதித் தேர்வுகள், நீட் என்று பெரும்பாலான சமூக மானவர்களின் கல்விக் கழுத்தை நெறித்த மோடியின் ‘ஏழைமகன்’ வேஷம் கலைந்துவிட்டது மக்களிடம்.

தமிழ்நாட்டில் தமிழ், தமிழ் என்று ஆடக் கூடாத ஆட்டத்தை எல்லாம் ஆடி, இன்று அவரே ‘ஆடி’ப் போய் இருக்கிறார், தோல்வி பயத்தில்.

தமிழ்நாடு அரசின் மக்கள் நிவாரண உதவியைக் கேவலாமாகப் பேசிய, ஆணவம் தலைக்கேறிய நிர்மலா சீத்தாராமன் செய்தியாளர்களிடம் பேசும்போது, தமிழ்நாட்டில் தேர்தலில் நிற்க என்னிடம் பணம் இல்லை என்று கூச்சம் இல்லாமல் சொல்கிறார்.

தேர்தல் பத்திரங்களைத் திரைமறைவில் வைத்துக் கொண்டு பா.ஜ.க மோடி அரசு கார்ப்பரேட்டுகளிடம் மிரட்டி வாங்கிய பணக் கொள்ளை, உச்சநீதி மன்ற உத்தரவால் மக்கள் முன் அம்பலப்பட்டு விட்டது.

வெள்ள நிவாரண நிதியென்று இன்னமும் ஒரு செப்புக்காசு கூட கொடுக்காத மோடி-அமித்ஷாக்களின் வரண்டு போன நெஞ்சத்தை மறைத்துக் கொண்டு, தமிழ்நாட்டு மக்களிடம் நரித்தனமாக வாக்குக்காக கையேந்தும் மோடியை இனியும் மன்னிக்க மாட்டார்கள் அவர்கள்.

எல்லோரையும், எப்போதும் ஏமாற்றிக் கொண்டு இருக்க முடியாது. இந்தியா கூட்டணி உடையும் என்று கூவியர்கள், இன்று பா.ஜ.கவை விட்டே தெரித்து ஓடுகிறார்கள்.

இன்று மோடியால் பேச முடியவில்லை. அமித் ஷாவின் பேச்சைச் கேட்க முடியவில்லை. நிர்மலா சீத்தாரமன் உளறிக் கொண்டு இருக்கிறார். அண்ணாமலையின் மனநோய் பேச்சைச் சொல்ல வேண்டியதில்லை.

என்ன காரணம்?

தோல்வி பயம்தான்! எங்கள் தந்தை பெரியாரின் தேவையை இப்போது வட ஒன்றியம் உணரத் தொடங்கி விட்டது.

வடஒன்றியமே இன்று தமிழ்நாட்டின் ‘திராவிட மாடலை’த் திரும்பிப் பார்க்கிறது, அதுதான் தேவை என்று சொல்லத் தொடங்கி விட்டது.

பா.ஜ.க வின் தோல்வி நிச்சயமாகி விட்டது! ‘இந்தியா கூட்டணி’ யின் வெற்றி உறுதியாகி விட்டது!

மக்கள் கவனமாக தாமரையைத் தோற்கடிக்க வேண்டும், வாக்குப் பதிவு நாளில்!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
ஆசிரியர் குழு:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408



## அறிவுத் தேடல்- 9




ராபர்ட் கால்டுவெல் பள்ளிப் படிப்பை முடிக்காதவர், அவர் எழுதிய திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண நூல் போலியானது என்று தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி பேசியது விவாதப் பொருளானது. அதற்கான விடையை "மெக்காலே, கால்டுவெல் - ஏன் எதிர்க்கப்படுகின்றனர்?" என்ற தலைப்பில் விரிவாக விளக்கம் அளித்து உரையாற்றினார் "திராவிட இயக்கத் தமிழர் பேரவை"யின் தலைவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்கள். சென்னை மாவட்டப் பேரவையால் 23-03-2024 அன்று சென்னை, அன்பகத்தில் நடத்தப்பட்ட அறிவுத் தேடல் 9 ஆம் இந்த நிகழ்வுக்குத் தோழர் எட்வின் தலைமை தாங்கினார். தோழர் இசைமதி அனைவரையும் வரவேற்றுப் பேசினார். தோழர்கள் கார்த்தி மற்றும் திராவிடமணி முன்னிலை வகித்தனர். கூட்ட நிறைவில் தோழர் சபானா நன்றி கூறி அவையை நிறைவு செய்தார்.

## காஞ்சிபுரம்: வேட்பாளர்கள் அறிமுகம்





காஞ்சிபுரம் மாவட்டம் படப்பை அடுத்த கரசங்கால் பகுதியில் 26-03-2024 அன்று இந்தியா கூட்டணி கட்சிகளின் செயல் வீரர்கள் மற்றும் காஞ்சிபுரம் தொகுதி வேட்பாளர் க.செல்வம், ஸ்ரீபெரும்புதூர் தொகுதி வேட்பாளர் டி.ஆர்.பாலு அறிமுக கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் இ.இளமாறன், மாவட்டத் தலைவர் செந்தாமரைச் கண்ணன், அன்பு, மானேகூஷா, பிரபாகரன், சாந்தசீலன், முத்துக்குமார் உள்ளிட்டப் பேரவைத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

## கோவை: செயல்வீரர்கள் கூட்டம்




கோவை நாடாளுமன்றத் தேர்தல் 'இன்டியா கூட்டணி' யின் தி.மு.கழக வேட்பாளர் கணபதி இராஜ்குமார் அறிமுகம் மற்றும் சட்டமன்றத் தொகுதி வாரியான செயல் வீரர்கள் கூட்டத்தில், திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் ஒத்துழைப்பை நல்கி உரையாற்றினர் துணைப் பொதுச் செயலாளர் தோழர் காசு நாகராசன்.

## சென்னை: அனைத்துக் கட்சிக்கூட்டம்




சென்னை சைதாப்பேட்டை, தென்சென்னை நாடாளுமன்றத் தொகுதி தி.மு.கழக தலைமையிலான 'இந்தியா கூட்டணி' யின் கழக வேட்பாளர் தமிழச்சி தங்கப்பாண்டியன் தேர்தல் பணி குறித்த அனைத்துக் கட்சி நிர்வாகிகள் கூட்டத்தில் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சென்னை மாவட்டத் தலைவர் கார்த்தி கருத்துரையாற்றுகிறார்.

## திருப்பெரும்புதூர்: ஆலோசனைக் கூட்டம்



திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதி தி.மு.க தலைமையிலான 'இந்தியா கூட்டணியின்' கழக வேட்பாளர் டி.ஆர். பாலு, தேர்தல் பணிகள் குறித்து தி.மு.க மாவட்டச் செயலாளர் த.மோ. அன்பரசு தலைமையிலான தாம்பரம் சட்டமன்றத் தொகுதியின் இந்தியா கூட்டணி கட்சிகள் கலந்தாலோசனை கூட்டத்தில் திராவிட இயக்கத் தமிழர் பேரவை மாவட்டச் செயலாளர் இ.இளமாறன், அன்பு, பிரபாகரன், மானேகூஷா உள்ளிட்டோர் தேர்தல் பணிகள் குறித்த கருத்துகளை வழங்கினர்.

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian